**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச்சபை - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச்சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானகாசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வைத்தியசாலைச்சபையின் 2023 திசெம்பா῾31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,வைத்தியசாலைச்சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால்

தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வைத்தியசாலைச்சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வைத்தியசாலைச்சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வைத்தியசாலைச்சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வைத்தியசாலைச்சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1இன் 80 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிநிலைமைக் கூற்று தயாரிக்கும் போது ஆண்டிற்குக் குறைந்த காலப்பகுதியொன் றில் தீர்த்து வைப்பதற்கு குறித்துரைத்த பொறுப்புக்கள் மாத்திரம் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்த வேண் டியிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் பணிக்கொடைக்களுக்கான ஒதுக்கீடுகளின் மொத்தப் பெறுமதியான ரூபா 53,728,397 நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர் களுக்காக பணிக்கொடை ஒதுக்கீடுகள் செலுத்த வேண்டிய பணிக்கொடை செலவினமாக நடைமுறை பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்வதற்கும், வருடம் ஒன்று பூர்த்தியாகின்ற சகல ஊழியர்களுக்காக வும் ஒதுக்கப்பட்ட தொகை எதிர்காலத்தில் நடைமுறையல்லாப் பொ றுப்புக்களாக வகைப்படுத் தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7இன் 49ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகர ண விடயங்கள் மீள் மதிப்பீடு செய்வதா யின் அந்த சொத்துக்களுக்கு உரித்தான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண வகுப்பும் மீள் மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 8,500,000 பெறுமதியான வாகனம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்படாமல் ஏனைய சகல வாகனங்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | நன்கொடையாகக் கிடை த்த இந்த வாகனம் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்தல் Amortization of Donation Assets கணக்குகளிலும் தாக்கம் ஏற்படுகின்றமையால் அவ்வாறே 2023ஆம் ஆண்டில் மீள் மதிப்பீட்டுப் பெறும தியை உள்ளக்கி கணக்கீடு செய்யப்பாதிருந்ததுடன் 2024ஆம் ஆண்டில் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7இன் 65ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன் தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக சபை தற்போது பயன்படுத்துகின்ற கிரயம் ரூபா 173,482,995 ஆன சொத்துக்களின் பயன் தரு ஆயுட்காலம் தொடர்பாக | இது தொடர்பாக உயிரியல் விஞ்ஞான பொறியியல் நிறுவனம் மற்றும் அரசாங்கத்தின் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறி விக்கப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனங்களில் அவ்வாறு மேற்காதிருந் தமை அறிவிக்கப்பட்ட மையால் | மேற்படி |

| | | |
|---|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்து சரியான இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண் பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அந்த சொத்துக்களின் பெறுமதி பூச்சியமாகக் காணப்பட்டது. | சொத்துக்கள் மதிப்பீடு செய்து சரியான இழிவுப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிப் பதற்கு முடியாதிருந்தது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வைத்தியசாலைக்குச் சொந்தமான 04 வாகனங்கள் 2023 ஆகஸ்ட் 29ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்களின் முழுமையான சொத்துக் கள் முழு ஆண்டிற்காகவும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 4,438,356 இனால் அதிகரித்து காண் பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப் பெறுமதியில் ஆண்டின் பற்றாக்குறை அதிக ரித்தும் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்கள் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த 04 வாகனங்களும் வருடம் முழுவதும் ஓட்ட நிலைமையில் காணப்பட் டமையால் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படை யில் முழுவருடத்திற்கும் பெறுமானத் தேய்வு செய் யப்பட்டுள்ளது. | இந்த தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கண் சிகிச்சையில் மின்சார நவீனமயப்படுத் தல் தொடர்பான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB) 2023 செப்டெம்பர் 07ஆம் திகதி ரூபா 1,269,219 பெறுமதியான பட்டியலை சமர்ப்பித்திருந் தது. உரிய செலவினம் அட்டுறு செலவி னமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணிகள் 2020.12.05 ஆம் திகதி முடிவடைந் திருந்த போதும் உரிய ஒப்பந்தக் கம்பனியின் பட்டியல் CECB இன் மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்படாமையின் காரணமாக 2021, 2022 என்ற அண்டுகளில் செலுத்தவதற்கு சமர்ப்பிக் கப்படாதிருந்தமை 2023.09.06ஆந் திகதி அங் கீகரிக்கப்பட்ட பட்டியலுக் காக நிதிப்பிரமாணம் 115இன் கீழ் கடந்த கொடுப்பனவுகளை விடு விப்பதற்கு தேவையான நிதி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பாடு கோரப்பட்டுள்ளதுடன் நிதி ஏற்பாட்டிற்காக அங்கீகாரம் கிடைத்தவுடன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | |
| (இ) | 2023 திசம்பர் 31இல் உள்ளவாறு மருத்துவ உபகரணங்கள், தளபாடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், கணனி மற்றும் இயந்திர உபகரணங்கள் என்ற 04 விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதிக்கும் கணக்காய் விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகள் மற்றும் ஆவணங்களின் பிரகாரமான பெறு மதிக்கும் இடையே ரூபா 1,611,954 அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாட்டிற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய பட்டோலைகள் மீண்டும் பரீட்சிக்கப் படுகின்றது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதியில் பேரேட்டுக் கணக்கை மீதிகளுடன் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபனவிதிக்கோவையின் II அத்தியாயத் தின் 2.1 மற்றும் 2.2 முதல் 2.6 வரையான பிரிவுகள் | பதவியணியினர் ஒவ்வொரு ஊழியரும் மற்றும் தரத்திலுள்ள பதவி களுக்காக தேவையான தகைமைகள், பதவியின் சம்பள அளவுத்திட்டம், வயது எல்லை மற்றும் உரிய ஏனைய விபரங்களை உள்ளடக்கிய ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து தாபனவிதிக்கோவையில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி அந்த நடைமுறைகளுக்காக உரிய அங்கீகாரம் | தற்போது வைத்தியசாலை பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிப்பதற்காக ஆலோ சனை பெற்றுக் கொள் ளும் வகையில் முகா மைத்துவ | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறப்பட்டிருக்கவில்லை | சேவைகள் திணைளத்துடன் கலந்து ரையாடப்படுகின்றது. | |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16ஆம் திகதிய இலக்கம் 09/2009 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை | சகல அரசாங்க நிறுவனங்களிலும் கை விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்து வதன் மூலம் உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை தரல் வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்துதல் தொடர்பான அறிக்கை வைத்திருக்க வேண்டியிருந்த போதிலும் வைத்தியசாலையில் வருகை மற்றும் வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவி ல்லை. | 2023.11.09ஆம் திகதி பணிப்பாளர் சபை கூட்டத் தின் போது கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துதல் தொடர்பாக விரிவானக கலந்துரையாடப்பட்டது டன் வைத்தியசாலை தொடர் பாக சகல தொழிற் சங் கங்களிலிருந்தும் சமர்ப் பிக்கப்பட்டிருந்த கோரிக் கைகளைக் கவனத்திற் கொண்ட பின்னர் கை விரல் அடையாள இயந் திரத்தை பயன்படுத்துதல் வைத்தியசாலைக்கு தேவையற்றதாக பணிப்பா ளர் சபையினால் தீர்மா னிக்கப்பட்டிருந்தது. | அரச நிருவாக சுற்றறிக்கை களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,078,072 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,647,614 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,430,458 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் வழங்கல் மற்றும் நுகர்வுச் செலவினம் ரூபா 70,680,881 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3. செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுகாதார அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் கொவிட் சமயத்தில் சிகிச்சை நிலையங்களாக செயற்படுவதற்காக வைத் தியசாலையினால் 2022ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 2,249,167 தொகை சுகாதார அமைச்சிலிருந்து மீள ளிப்புச் செய்து | சுகாதார அமைச்சிற்கு இந்த நிதியை மீளளிப்புச் செய்வதற்குரிய சகல ஆவணங்களும் சமர்ப்பிக் கப்பட்டுள்ளதுடன் இது வரை அந்த பணத்தை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுகளின் போது சேவையை விட்டுச் சென்ற ஊழி யர்கள் இருவரிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 1,470,711 ஆன நிலுவைக் கடன் பெறுமதி கணக்காய்வு திகதியான 2024 யூன் 15ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தாதி உத்தியோகத் தர்களுக்கு அறிவிக்காமல் சேவையை விட்டு நாட் டில் இருந்து வெளியே சென்றிருந்ததுடன் அவர் கள் சேவையிலிருந்து விலகும் போது ஊழியரி னால் வைத்தியசாலைக்கு வழங்கவேண்டியிருந்த அடையாள அட்டையை வழங்காமையின் காரணமாக பணிக்கொடைப் பணம் செலுத்தப்படாதிருந்தமை யால் வைத்தியசாலைக்கு அறவிட வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | மேற்படி |
| (இ) | வைத்தியசாலையில் சிறுவர் நோய் சிகிச் சை மற்றும் தொண்டை காது நாக்கு சிகிச்சைகள் 2021ஆம் ஆண்டு முதல் நடாத்தப்படாதிருந்ததுடன் குடும்ப சுகாதார சிகிச்சை 2023 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு தவறியிருந்தது. | இந்த சிகிச்சைகளை நடாத்திச் சென்ற விஷேட வைத்திய நிபுணர் இருவரும் வைத்தியசாலையில் நிரந்தரமாக்கப்படாதிருந்ததுடன் 2022ஆம் ஆண்டில் அவர்கள் இருவரும் வைத்தியசா லையிலிருந்து விலகிச் சென்றதுடன் இந்த சிகிச்சைகள் நடாத்தப்பட வில்லை. | காணப்படுகின்ற வளங்களை செயற்திறனாக பயன்படுத்த வேண்டியிருந்த துடன் சிகிச்சை களை நடாத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007இல் மருந்துகள் மற்றும் துணைப் பாகங்களின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.1 மற்றும் 2.2 வழிகாட்டி யின் பிரகாரம் மருந்துகள் மற்றும் மருத்துவ துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்யும் போது சகல கேள்விதாரரும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்திருத்தல் கட்டாயமாக இருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் கேள்வி ஆவணங்க ளுடன் பதிவினை சமர்ப்பிக்காத மற்றும் பதிவு காலாவதியாகியிருந்த கேள்வி தாரர்களுக்கு 09 சந்தர்ப்பங்களின் போது பெறுமதி ரூபா 5,928,038 ஆன கேள்விகள் | வைத்தியசாலைகளில் மிகவும் அவசர சத்திர சிகிச்சை மற்றும் சத்திர சிகிச்சை சேவை கூட சேவைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக வைத்தியசாலைகள் பதிவு செய்தல் வழங்குநர் நிறு வனத்தின் மூலம் கூறு விலைகள் கோரப்படுவ துடன் சில சந்தர்ப்பங்க ளின் போது காலாவதி யாகியிருந்த சான்றிதழ் சமர்ப்பித்திருந்தமை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இது தொடர்பாக கேள்விதாரரிடமிருந்து விசாரணை செய்திருந்த போதும் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழைப் | பதிவு செய்த வழங்குநர்களி டமிருந்து மாத்திரம் மருந்துளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையளிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக் கொள்வதற்கு காலம் எடுக்கின்றதாகவும், உரிய பதிவு கிடைத்தவுடன் அதனை சமர்ப்பிப்பதாகவும் அறி வித்திருந்தனர். வழங்கு நர்கள் இதற்கு மேற் கூறப்பட்ட வைத்தியசா லைக்கு வழங்கியிருந்த மையினால் ஏனைய மாதிரிகளுடன் இணங்கு கின்றமை மற்றும் ஆகக் குறைந்த விலைகளை மாத்திரம் கருதி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2007இன் மருந்துகள் மற்றும் துணைப் பாகங்களின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2 வழிகாட்டியின் பிரகாரம் அவசரம் மற்றும் அத்தியவசிய சந்தர்ப்பங் கள் தவிர கொள்வனவுகளை மேற்கொள் ளும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சுகாதார அமைச்சின் பிரதிநிதி ஒரு வர், அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதி, ஆகக் குறைந்தது விஷேட நிபு ணரின் ஆலோசனையாளர் இருவர் மற்றும் திறைசேரியால் பெயர் குறிப்பிடப்பட்ட முக வர் ஒருவரை உள்ளடக்கியிருக்க வேண்டி யிருந்த போதிலும் 10 சந்தர்ப்பங்க ளின் போது வைத்தியசாலையால் கொள் வனவு செய்யப்பட்ட ரூபா 27,461,853 ஆன மருந்துகள் மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பாக அவ்வாறான பிரதிநிதித்து வத்தை உடைய குழுவொன்று நியமிக்கப் பட்டிருக்கவில்லை. | சகல சத்திர சிகிச்சைப் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் மிகவும் அவசியமாக இருந்தமை மற்றும் அவசர சத்திர சகிச்சை உபகரணங்களாக இருந்ததுடன் திட்ட மிடப்பட்ட சத்திர சிகிச்சை பணிகள் மற்றும் உயிர் பாதுகாப்பு சத்திர சிகிச் சைகளுக்காக சத்திர சிகிச்சைக் கூடத்தில் சத் திர சிகிச்சை சேவை களை தொடர்ச்சியாக நடாத்திச் செல்ல வேண்டி யிருந்தமையால் வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையினால் நிருவகிக்கப்படுகின்ற வைத்தியசாலையாக உரிய கேள்விதாரரைத் தெரிவு செய்வதற்காக வைத்தியசாலைப் பணிப்பாளரால் சத்திர சிகிச்சை மருத்துவருக்கு, மருந்தியலாளருக்கு மற்றும் நிருவாக உத்தியோகத்தரை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. | மருந்துகள் மற்றும் துணைப் பாகங்களின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2006இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 2.14.1 வழிகாட்டியின் பிரகாரம் ரூபா ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான பெறுகைள் திணைக்களத் தலைவரின் தலைமையில் இருக்க வேண்டிய திணைக் களப் குழுவொன்றின் மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் 07 சந்தர்ப்பங்களின் | வைத்தியசலையின் அவசர மற்றும் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் துணைப் பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக கையளிக்கப்பட்ட நிதி அதிகாரத்தின் பிரகாரம் ரூபா 100,000 வரையான எல்லையில் பணிப் பாளர்களுக்கு ரூபா 100,000 முதல் ரூபா 12.5 மில்லியன் வரையான எல்லையில் பிரதேச பெறு கைக் குழுவிற்கும் | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிகளுக் கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

போது ரூபா 24,726,763 ஆன கொள்வனவுகள் பிரதேச பெறுகைக் குழுவின் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கையளிக்கப்பட்டுள்ள நிதி எல்லையில் சகல கொள் வனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2006இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.5(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் செயற்பணிகளுக்காக நியமிக்கப்பட்ட பிரதேச பெறுகைக் குழு விடயம் தொடர்பாக அறிவுள்ள உத்தியோகத்தரை உள்ளடக்கி இருந்ததை திணைக்களத் தலைவர் ஏற்றுக்கொண்டால் மாத்திரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உதவியின்றி ஒப்பந்தம் கையளித்தல் தொடர்பாக தீர்மானமாக திணைக்களத் தலைவரினால் பிரதேச பெறுகைகள் குழு நிறைவேற்ற முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறான ஏற்பாடுகள் இன்றி மீளாய் வாண்டில் கூட்டுப்பெறுமதி ரூபா 2,802,965 ஆன 02 ஒப்பந்தங்களுக்கான பெறுகைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு நியமிக்கா மல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகைகளுக்கான கொள்வனவுத் திட்டம் (Shopping) பயன்படுத்தும் போது ரூபா 3.5 மில்லியன் வரையான பெறுகைகள் தொடர்பாக ஆகக் குறைந்தது முத்திரை யிடப்பட்ட 05 கேள்விகள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பெறுகை களின் உரிய போட்டி நிலைமைக்கு அனுப்பாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

வைத்தியசாலை வாட்டு இலக்கம் 05 தையும் காயங்களுக்கு சிகிச்சை யளிக்கின்ற நிலையத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மத்திய வளிப் பதனாக்கி முறைமைக் காக பாதுகாப்பு வலை அமைக்கின்ற பணிகளை மேற்கொள்ளும் போது வைத்தியசாலையில் பதிவுசெய்திருந்த ஒப்பந்தகாரரி டமிருந்து கூறுவிலை கோரி அந்தக் கூறுவிலை யுடன் கேள்வி ஆவணங்கள் வைத்தியசாலை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அந்த தொழில்நுட்ப அறிக்கை யின் பிரகாரம் அந்த பழுதுபார்த்தல் நடவடிக் கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

மேற்படி